# 11 குடமுழுக்குக் கிரியைகள்

## Q› ø¯PÒ £ØÔ¯ uzxÁ Â Í UP®

கிரியை என்ற சமூக சமயத்துறைக் கலைச் சொல் பல்வேறு சந்தர்ப்பங்களிலே மக்கள் அனுட்டிக்கும் நியதிச் செயல்கள் என்னும் கருத்தில் சமயப்பிரமாண நூல்களில் வழங்கி வருகின்றது. கரணம், சடங்கு என்பனவும் அதே பொருளைத் தரும் சொற்களாகும். இந்நியதிச் செயல்கள் ஆலயக்கிரியைகள், வீட்டுக் கிரியைகள் என்னும் இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கியது. பூசைகள், அபிடேகங்கள், சாந்திகள் என்பன ஆலயக் கிரியைகளுக்கு உதாரணங்களாகும். திருமணச்சடங்கு, பூப்புநீராட்டு, சஷ்டியர்த்தபூர்த்தி என்பன வீட்டுக்கிரியைகளுக்கு உதாரணங்களாகும். சைவசமயிகளுக்கு இத்தகைய கிரியைகள் பற்றிச் சிவாகமங்களும் அவற்றைச் சார்ந்த உபாகமங்களும், இவற்றின் அடிப்படையில் எழுந்த பத்ததிகளும் எடுத்துக் கூறியுள்ளன.

நித்திய கிரியைகள் என்னும் தொடரின் கருத்து ஆலயங்களில் தினமும் நிகழும் நியதிச் செயல்கள் என்பது ஆகும். அவை ஆலயங்களின் வசதிக்கேற்ப மேற்கொள்ளப்படும். உஷத்காலப் பூசை, காலைச்சந்திப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப் பூசை, இரண்டாங்காலப் பூசை, அர்த்தசாமப் பூசை என்பன நித்திய கிரியைகளாகும்.

யாதாயினும் ஒரு விசேட காரணத்தை அல்லது நிமித்தத்தை முன்னிட்டு ஒருவார, இருவார, ஒருமாத, சிலமாத, ஒருவருட, பலவருட நியதிச் செயல்கள் நைமித்திய கிரியைகள் எனப்படும். ஒருவார இடைவெளியின் பின் நிகழும் விசேட பூசைகளுக்கு உதாரணமாக சுக்கிரவார பூசை, சோமவார பூசை என்பவற்றைக் குறிப்பிடலாம். பிரதோச விரத காலப் பூசை இரு வாரத்திற்கு ஒருமுறை நிகழும் நைமித்திய பூசையாகும். மாதப்பிறப்பு, சதுர்த்தி ஆகிய விசேடதினப் பூசைகள் மாதமொரு முறை நிகழும் நைமித்தியக் கிரியைகள் ஆகும். நடேசர் அபிடேகங்கள் சில மாதங்களுக்கொரு முறை என்ற அடிப்படையில் ஓராண்டில் ஆறுமுறை நிகழும் நைமித்தியக் கிரியையாகும். தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் முதலியனவும் ஆலயங்களில் நிகழும் மகோற்சவமும் / பிரமோற்சவம், வருடமொரு முறை நிகழும் நைமித்திய கிரியைகள் அல்லது பெருங்கிரியைகள் ஆகும். மகாமகம் பன்னிரு வருடங்களுக் கொருமுறை நிகழும் நைமித்திய கிரியை ஆகும். நைமித்தியக் கிரியைக்குள் அடங்குவதே கும்பாபிஷேகம் என்னும் கிரியையாகும்.

கும்பாபிஷேகம், குடமுழுக்கு என்ற பெயராலும் அழைக்கப்படும். புதிதாக உருவாக்கப்படும் கோயில்களுக்குச் செய்யப்படும் கும்பாபிஷேகம் நூதன கும்பாபிஷேகம் எனவும், பழைமையான கோயில்களைப் புதுப்பித்து மீண்டும்

கும்பாபிஷேகம் செய்வது ஜீரனோத்தாரண கும்பாபிஷேகம் எனவும் கும்பாபிஷேகம் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டதாகும். திருக்கோயில்களில் கர்ப்பக் கிரகத்துள் மூர்த்தத்தை எழுந்தருளச் செய்யும் முன் பீடத்தில் அஷ்டபந்தன மருந்துகளை முறையாகச் சாத்தி உயிர்ப்பு சக்தி, நிலை பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தங்கம் முதலான உலோகங்களை இட்டு ஆயத்தப்படுத்தப்படும். அதன்பின்பே ஆகம விதிப் படி அப்பீடத்தின் மேல் மூர்த்தம் எழுந்தருளச் செய்யப்படும். அஷ்டம் என்றால் எட்டு எனப் பொருள்படும். எண் வகைப் பொருள்களை ஒன்று சேர்த்து பந்தனம் செய்விப்பது, அதாவது பீடத்தில் நிலைக்கச் செய்வது என்பதே அஷ்டபந்தனமாகும். அஷ்ட பசுக்களை இதன் வழி நிலைக்கச் செய்து அவர்களின் அருளைப் பெறுவதே இதன் தத்துவமாகும். கர்ப்பக் கிரகத்தின் உச்சி மீது செப்புக் கலசங்கள் பொருத்தி அந்தக் கலசங்கள் மீதுதான் கும்பாபிஷேகம் நடைபெறும்.

மனிதன் பஞ்சபூதச் சேர்க்கையினால் உருவானவன். இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் அமையப்பெற்றது. இந்தப் பஞ்ச பூதங்களின் சக்திகளையும் ஒருசேர ஈர்த்து ஒன்றாக்கி கோபுரக் கலசத்தில் நிலை நிறுத்தச் செய்வதே கும்பாபிஷேகத்தின் நோக்கமாகும். ஆகாயத்தின் பேரருளைக் காற்றில் ஒன்றச் செய்து, காற்றின் பேரருளை யாகத்தில் எரியும் தீயில் நிலைக்கச் செய்து, அந்தத்தீயின் பேரருளை கும்பத்திலுள்ள நீரிலும், புனிதநீரின் பேரருளை கோபுரக்கலசத்திலும் நிலைக்கச் செய்து, இந்த ஒட்டு மொத்தப் பேரருளையும் கலசவழி உள்ளிறக்கி கர்ப்பக்கிரக மூர்த்தத்தில் நிலைக்கச் செய்வதே கும்பாபிஷேகத்தின் நிறைவு நிகழ்வாகும். சாதாரண குடத்தினுள் புனிதநீரை நிரப்பி வாய்ப்புறத்தில் மாவிலைகளைச் செருகி, தேங்காய் வைத்து, குடத்தின் மேல் நூல் சுற்றப்பட்டுப் பூசைக்கு வைக்கப்படுகிறது. மஞ்சள், குங்குமம் வைத்து அலங்கரிக்கப்பட்ட பின்பே அது கும்பமாகின்றது. குடம் உடல், தேங்காய் முகம், கண்கள் மேலே சுற்றப்பட்டுள்ள நூல் உடலில் ஓடும் இரத்தநாளங்கள், உள்ளே உள்ள புனிதநீர் குருதி எனக் கொள்ளவேண்டும். இந்தக் கும்பநீரே யாகசாலைப் பூசையை முடித்து, தலையில் தாங்கி எடுத்துச் செல்லப்பட்டு, திருக்கோயிலை வலம் வந்து, பின் குறிப்பிட்ட நேரத்தில் கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. இதன் பின்பே கர்ப்பக்கிரக மூர்த்தத்திற்குப் புதிய சக்தி பிறக்கிறது. இதன் பின்புதான் அம்மூர்த்தம் பக்தர்களுக்கு அருளை வழங்குகின்றது.

இவ்வாறு சக்தி ஊட்டப் பெற்ற மூர்த்தத்தோடு இந்த அருளைப் போற்றலானது 12 ஆண்டுகள் பொதிந்து இருக்கும். பின் மீண்டும் அதற்கு உயிரூட்ட வேண்டும். அவ்வாறு செய்தாலேயே கருவறை மூர்த்தம் தொடர்ந்து அருளை வழங்கிட இயலும். 12 ஆண்டுகள் கடந்த பின் கோயிலுக்கு மீண்டும் கும்பாபிஷேகம் செய்யாவிட்டால், மூர்த்தத்தில் உள்ள சக்தி தலவிருட்சத்தில் சென்று 12 ஆண்டுகள் தங்கி இருக்கும் அடுத்த 12 வருடத்துக்குள் கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் அந்த இறை சக்தி வானில் சென்று கலந்து விடும்.

கும்பாபிஷேகம் நடந்தபின் 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். 48 நாட்கள் கொண்டது ஒரு மண்டலம் என்பதால் அது மண்டலாபிஷேகம் எனப்படும். தினவழிபாடு, வாரவழிபாடு, மாதவழிபாடு என எவ்வழிபாட்டையுமே செய்ய

இயலாதவர்கள் 12 ஆண்டுகளுக்கொருமுறை செய்யப்படும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு கண்குளிரக் கண்டு இறைவனை மனத்தினுள் கொண்டு கண்ணீர் மல்கிக் கை தொழுவோமானால் நாள், வாரம், பருவம், மாதம், ஆண்டு பேரருள் வந்து வாய்க்குமோ அத்தகைய பேரருளும் பெருமையும் புகழும் ஒன்று சேர்ந்து கிடைக்கும்.

## அ. கும்பாபிஷேகம் நடைமுறைகள்

**1. அனுக்ஞை -** ஆற்றல் மிக்க அர்ச்சகரைத் தெரிவு செய்து இறைவன் அனுமதி பெற்று செயலைச் செய்வதற்காக நியமனம் செய்வதை அனுக்ஞை என்று கூறுவர்.

**2. கணபதி பூசை -** செயல் செவ்வனே நிறைவேற கணபதியை வழிபடுவது கணபதிபூசை எனப்படும்.

**3. வாஸ்து சாந்தி -** கும்பாபிஷேசம் எவ்வித இடையூறுமின்றி இனிதே நிறை வேறவும், செய்பவர்களுக்கும், செயலுக்கும் எவ்வித தீங்கும் வராதபடி தடுக்கும் செயலுக்கு வாஸ்து சாந்தி எனப்பெயர்.

**4.மண் எடுத்தல் -** அட்டதிக்குப்பாலகரிடம் அனுமதி பெற்று தூய்மையான இடத்திலிருந்து மண்ணெடுத்து அப்பள்ளத்தில் அபிஷேகம் செய்வது மண்ணெடுத்தல் என்னும் கிரியை ஆகும்.

**5. முளையிடல் -** மண் பாத்திரங்களில் விதைகள் இட்டு முளைக்கச் செய்வது முளையிடல் ஆகும்.

**6. காப்புக் கட்டுதல் -** கிரியைகளைச் செய்பவருக்குத் தீய சக்திகளால் இடையூறு ஏற்படாதவாறு காக்கும் பொருட்டு அவரது கையில் காப்புக்கட்டுவது காப்புக் கட்டுதல் எனப்படும்

**7. கும்பஸ்தாபனம் -** கும்பங்கள் எனப்படும் கலசங்களை ஸ்தாபனம் செய்தல் கும்பஸ்தாபனம் எனப்படும்.

**8. கலாகர்ஷணம் -** எந்த மூர்த்தம் எந்தக் கலசத்தில் ஆவாகனம் செய்யப்படுகிறதோ அந்த மூர்த்தி அந்தக்கலசத்தில் இருப்பதாகக் கருதி அதற்குப்பூசை செய்தல் கலாகர்ஷணம் எனப்படும்.

**9. யாகசாலை -** யாகங்கள் செய்யும் சாலைகளை முறைப்படி அமைப்பது யாகசாலை எனப்படும்.

*10.* **பிம்பசுத்தி** - *விக்கிரகத்தை அழுக்கு நீக்கிச் சுத்தம் செய்து அபிஷேகம் செய்வது பிம்பசுத்தி ஆகும்.*

*11.***ஸர்பஸா ஹிதி** - *யாக சாலை அமைத்த இடத்துக்கும் மூல மூர்த்திக்கும் தர்ப்பைக்கயிறு, தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி போன்றவற்றால் இணைப்பை ஏற்படுத்துவது ஸர்பஸா ஹிதி எனப்படும்.*

*12.* **அஷ்டபந்தனம்** - *கொம்பு, அரக்கு, கருங்குங்கிலியம், சுக்கான், காவிக்கல் வெண்மெழுகு, வெண்ணெய், செம்பஞ்சு, சாதிலிங்கம் என்னும் எட்டுப் பொருட்களினாலான மருந்தினால் மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல். இதனை மருந்து சாத்தி பந்தித்தல் என்றும் கூறுவர்.*

*13.* **குடமுழுக்கு** - *யாகசாலையில் மும்மூர்த்திகளுக்குரியதாக வைத்து வழிபாடு செய்யப்பட்ட கலசத்து நீரை அந்தந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்வதாகும். இதன் மூலம் அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருள்கின்றார். இதனால் இச்செயல் குடமுழுக்கு எனப்படும்.*

*14.* **மகாபிஷேகம்** - *குடமுழுக்கு முடிவுற்ற பின் மூல விக்கிரகத்துக்கு முறைப்படி அபிஷேக அலங்காரங்கள் செய்யப்படுவதை இது குறிக்கும்*

*15.* **மண்டலாபிஷேகம்** - *அடுத்தகிரியையாக மண்டலாபிஷேகம் தொடர்ந்து ஒரு மண்டலம் நடைபெறும்.*

## ஆ. கும்பாபிஷேகம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

*1. ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட விக்கிரகங்களின் சக்தி பன்னிரண்டு ஆண்டுகள் வரையே இருக்கும். அதனால் தான் மீண்டும் கும்பாபிஷேகம் செய்து விக்கிரகங்களுக்குச் சக்தி உண்டாக்கப்படுகிறது. அதன்பின் நாம பூசையும், அபிஷேகங்களும் செய்யச் செய்ய விக்கிரகத்திற்கு அபரிதமான சக்தி உண்டாகிறது.*

*2. கும்பாபிஷேகம் செய்வதால் ஆலயம் புதுப்பிக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் விளங்கும்.*

*3. ஓமப் புகை எம்மீதுபடுவதால் உடலில் உண்டாகும் நோய்கள் நீங்கும்.*

*4. தெய்வ சந்நிதானத்தில் அனைவரும் கூடுவதால் சமய இணக்கம், நட்பு ஆகியவை ஏற்படும்.*

5. கும்பநீர் நம் மீது படுவதால் உடல் நலம் அதிகரிக்கும்.

6. நாட்டில் மழைபெய்யும், பயிர் சிறக்கும், மக்கள் நலமுடன் வாழ்வர்.



**பிரதான யாகசாலையில் பிரதான கும்பம் பூசிக்கப்படல்**



**அடியவர்கள் எண்ணெய்க் கப்பு சாத்துதல்**



**கும்பங்களுடன் வலம் வருதல்**



**தூபிகளுக்கு குடமுழுக்கு இடம்பெறுதல்**

## பாடச் சுருக்கம்

மக்களால் அனுட்டிக்கப்படும் நியதிச் செயல்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் நித்திய, நைமித்தியக், காமிகக் கிரியைகளாகும்.

நைமித்தியக் கிரியைக்குள் அடங்குவதே மகாகும்பாபிஷேகமாகும்.

மகாகும்பாபிஷேகம் குடமுழுக்கு என்ற பெயராலும் அழைக்கப்படும்.

மகாகும்பாபிஷேகம் பல நடைமுறைகளைக் கொண்டுள்ளது.

மகாகும்பாபிஷேகத்தை ஒழுங்கான முறையில் செய்வதால் பல நன்மைகள் ஏற்படும்.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆகமங்கள் கூறும் கிரியைகள் எத்தனை வகை? அவை யாவை?
2. ஆலயங்களில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் முறைகளைத் தருக?
3. மகாகும்பாபிஷேகம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
4. மகாகும்பாபிஷேகம் நடைமுறை விதிகளைத் தருக.
5. மகாகும்பாபிஷேகம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

உமது பிரதேசத்திலோ அல்லது அயற் பிரதேசத்திலோ உள்ள கும்பாபிஷேகம் நடைபெறும் ஆலயம் ஒன்றுக்குச் சென்று, அங்கே நடைபெறும் கிரியை முறைகளை அவதானித்து, அதனை ஆசிரியரின் உதவியுடன் அட்டவணைப்படுத்தி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.